(ஆ) மாநில தகவல் ஆணையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல் தொடர்பான பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில தகவல் ஆணையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்பட வேண்டிய அவசியத்தைக் கருதி, இதற்கென சென்னை, சைதாப்பேட்டையில் ஒரு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன. மாநில தகவல் ஆணையத்திற்கு, விசாரணை அறைகள், ஆணையர்களுக்கான அறைகள், அலுவலக அறைகள், மனுதாரர்களுக்கான காத்திருக்கும் அறைகள், நூலகம், கூட்ட அரங்கு, வாகன நிறுத்துமிடம், மனுதாரர்கள் மற்றும் அலுவலர்களுக்கான அடிப்படை வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்திட தரைத்தளம் மற்றும் 5 தளங்களைக் கொண்ட சொந்தக் கட்டடம் ஒன்று 27.79 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)*

(இ) விழுப்புரம் மாவட்டம், அழகன்குப்பம், காஞ்சிபுரம் மாவட்டம், ஆலம்பரைக்குப்பம், கழிவேலி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம், ஆற்காட்டுத்துறை மீன்பிடி துறைமுகங்கள் அமைத்தல், நாகூர் மீன்பிடி இறங்குதளம், வெட்டார் ஆற்றின் வடக்குப் பகுதியில் கடல் அரிப்பு தடுப்புச் சுவர் கட்டுதல், தூத்துக்குடி மாவட்டம், பெரியதாழையில் அலை தடுப்புச் சுவர் கட்டுதல், சென்னை மீன்பிடித் துறைமுகத்தில் படகு அணையும் தளங்கள் மற்றும் விற்பனைக் கூடம் கட்டுதல் தொடர்பான மீன் வளத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 30–8–2017 அன்று நடந்த மாண்புமிகு புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவில், விழுப்புரம் மாவட்டம் அழகன்குப்பம், காஞ்சிபுரம் மாவட்டம், ஆலம்பரைக்குப்பம், கழிவேலியில் பக்கிங்காம் கால்வாய் பகுதியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்று என்னால் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன்படி தயாரிக்கப்பட்ட திட்ட அறிக்கையின்படி, விழுப்புரம் மாவட்டம் அழகன்குப்பம், காஞ்சிபுரம் மாவட்டம், ஆலம்பரைக்குப்பம், கழிவேலியில் பக்கிங்காம் கால்வாய் பகுதியில் மீன்பிடித் துறைமுகங்கள்*